செ.வெ.எண்-02 நாள்-01.02.2017

# அரியலூர் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.02.2017) நட்டு வைத்தார்.

அரியலூர் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன வளாகத்தில் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (01.02.2017) நட்டு வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் வளர்ச்சித்துறை சார்பில் மாவட்டம் முழுவதும் அரசு அலுவலகங்கள், பொது இடங்கள், ஆறு ஏரிக்கரைகள் போன்ற இடங்களில் மரக்கன்றுகளை நட்டு பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களும் தங்கள் இடங்களில் மரக்கன்றுகளை விழாக்காலம், பிறந்த நாள், திருமண விழா போன்ற நல்ல நாட்களில் மரக்கன்றுகளை நட்டு வனம் காக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, உதவி செயற்பொறியாளர் திரு.அருள்மொழி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரபாகரன், திரு.ஜாகிர்உசேன் மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் திரு.அருணாச்சலம், ஆசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.